நம்புகிறேன். ஆனால் தமிழகத்தில் இருக்கின்ற கிராமங்களைப் பொறுத்தவரையில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வேண்டுமென்றுதான் விரும்புகிற காலமாக இது இருக்கிறது. அந்த வகையில் ஏதாவது ஒரு விரிவானத் திட்டத்தை அரசு நடைமுறைப்படுத்த உள்ளதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குடிநீர் வடிகால் வாரியம் பற்றி அறிக்கை சொல்கிறபோதே குறிப்பிட்டிருக்கிறேன். இந்த ஆண்டு 10,323 குடியிருப்புகள் என்பது சிறிது கூட நீர் ஆதாரமே இல்லாத குடியிருப்புகள் . . . .(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் அவர்கள் தன்னுடைய இருப்பிடத்தில் போய் உட்கார வேண்டும்.

9-45 மணி

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : அந்த 10,323 குடியிருப்புகளிலும் ஒரு நீராதாரம் கூட இல்லாத நிலை இருந்தது. ஆகவே, தமிழக அரசு அப்படிப்பட்ட குடியிருப்புகளுக்கு ஒரு நீராதாரத்தையாவது உருவாக்கவேண்டுமென்ற அடிப்படையில்தான் இந்த 10,323 குடியிருப்புகளுக்கும் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டிருக்கிறது. உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போல மேலும் பாதி குடிநீர் வசதி செய்யப்பட்ட குடியிருப்புகளுக்கு அதாவது சில இடங்களில் தொட்டிகள் இருக்கின்றன, நீராதாரம் இல்லாத சூழ்நிலை, நீராதாரம் இருந்தும் அந்த மக்களுக்குத் தேவையான அளவு குடிநீர் இல்லாத சூழ்நிலை, இப்படிப்பட்ட கிராமங்கள் எல்லாம் கணக்கிடப்பட்டிருக்கின்றன. அவைகளுக்குப் படிப்படியாக இந்த ஐந்தாண்டுகளுக்குள் முழுமையாகத் தண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. குடிநீர்த் தொட்டிகளே இல்லாத கிராமங்கள் இருக்கக்கூடாது என்ற அடிப்படையில் வருகிற ஐந்தாண்டுக்காலத்தில் ஒவ்வொரு கிராமத்திற்கும், குடிநீர்த் தொட்டிகள் இல்லாத கிராமங்களுக்கும், குடிநீர்த் தொட்டிகள் கட்டிக் கொடுக்க அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடலூரில் பாதாளச் சாக்கடைத் திட்டம்.

*3526—திரு. இ. புகழேந்தி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கடலூரில் பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

1990 மே 11]

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திட்டம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளது. கடலூர் நகராட்சியிடமிருந்து ஆய்வுத் தொகையைப் பெற்றவுடன் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கான ஆய்வு வேலைகள் தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் மேற்கொள்ளப்படும்.

திரு. இ. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கடலூர் நகர மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான கடலூர் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்பட வாய்ப்பு வசதிகள் உள்ளன. ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கடலூர் நகரமன்றம் செலுத்த வேண்டிய பணத்தைச் செலுத்தினால், உடன் திட்டம் செயல்பட வாய்ப்பு இருக்கும் என்று தெரிவித்தார்கள். கடலூர் நகராட்சி போதுமான வருவாய் இல்லாத நகராட்சியாக இருப்பதால், அந்த நகரமன்றம் எவ்வளவு கட்ட வேண்டுமோ அதை மானியமாகவோ அல்லது கடனாகவோ இந்த அரசு ஏற்று, அந்தத் திட்டத்தின் அவசியம் காரணமாக பாதாளச் சாக்கடைத் திட்டத்தை கடலூர் மாநகரத்திற்கு வழங்க பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் நகராட்சியிலிருந்து 16—9—1989இல் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கான புதிய ஆய்வுகளைத் துவக்க வேண்டுமென்று அவர்களே தீர்மானத்தைப் போட்டு அனுப்பியிருக்கிறார்கள். அதற்கான ஆய்வுப் பணிகள் துவக்குவதற்கு மட்டும் 3.5 இலட்சம் ரூபாய் செலவாகும் என்றும், அதை நகராட்சி கட்ட வேண்டுமென்றும் குடிநீர் வடிகால் வாரியம் அந்த நகராட்சிக்கு எழுதியிருக்கிறது. அவர்கள் அந்தத் தொகையைக் கட்டிவிட்டால் ஆய்வுப்பணிகள் தொடங்கப்படும். மேலும், இதுபோன்ற செலவுகளுக்குக் கடனாகவோ மானியமாகவோ வழங்குவது குறித்து அதற்கான முழுச் செலவை அளிக்க வேண்டுமென்று அதற்காக அரசுக்குத் தனியாக விண்ணப்பித்தால் நிதிநிலைமைகளைப் பொறுத்து அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அய்யலூரில் அரசு மருத்துவமனை.

* 5222—திரு. ப. முத்துசாமி :
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வேடசந்தூர் தொகுதி, அய்யலூரில் அரசு மருத்துவமனை கட்டப்படுமா ?